# அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை
# Ang Mo Kio Tamil Methodist Church

## 12 நவம்பர் ஞா யிறு ஆராதனை
## 12 November 2023 Sunday Service

✝ **ஆராதனைக்கு அழைப்பு** — **திருமதி ஷீபா ஜான்சன்**
Call to Worship — Mrs. Sheeba Johnson

**இறைவணக்கப்பாடல்** — Choir
Introit

**ஜெபம்** — **திருமதி ஷீபா ஜான்சன்**
Prayer — Mrs. Sheeba Johnson

✝ **தொடக்க பாடல்** — **சபையார் இணைந்து**
Opening Song — Congregation

1. நீரோடையை மான் வாஞ்சித்து
கதறும் வண்ணமாய்
என் ஆண்டவா , என் ஆத்துமம்
தவிக்கும் உமக்காய்

2. தயாள கர்த்தா, உமக்காய்
என் உள்ளம் ஏங்காதோ ?
உம மாட்சியுள்ள முகத்தை
எப்போது காண்பேனோ?

3.என் உள்ளமே விசாரம் ஏன்?
நம்பிக்கை கொண்டு நீ
சதா உன் ஜீவ ஊற்றேயாம்
கர்த்தாவை ஸ்தோத்தரி.

4. நாம் வாழ்த்தும் கர்த்தனார்
பிதா
குமாரன், ஆவிக்கும்,
ஆதிமுதல் என்றென்றுமே
துதி உண்டாகவும்.

***மாறி வாசித்தல் 46ம் ஞாயிறு***
***தேவ ஆராதனை புத்தகம் 76*** — ***சபையார் இணைந்து***
Congregation

"கர்த்தரின் மகிமை"

Psalter Reading –Page 76 "Psalm 138"

***தந்தை போற்றி*** — ***சபையார் இணைந்து***
Gloria Patri — Congregation

***துதி ஆராதனை***
Singspiration

***ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்*** — ***மறைதிரு. விஜய் ஜோஸப்***
Thanksgiving & Pastoral Prayer — Rev. Vijay Joseph

***பரமண்டல ஜெபம்*** — ***சபையார் இணைந்து***
Lord's Prayer — Congregation

✝ ***காணிக்கை பாடல்*** — ***சபையார் இணைந்து***
Offertory Song — Congregation

**தந்தேன் என்னை இயேசுவே**
**இந்த நேரமே உமக்கே**
**உந்தனுக்கே ஊழியஞ்செய்யத்**
**தந்தேன் என்னைத்**
**தாங்கியருளும்**

1. ஜீவ காலம் முழுதும்
தேவ பணி செய்திடுவேன்
பூவில் கடும் போர் புரிகையில்
காவும் உந்தன் கரத்தினில்
வைத்து

2. உலகோர் என்னை நெருக்கிப்
பலமாய் யுத்தம் செய்திடினும்
நலமாய் சர்வ ஆயுதம் பூண்டு
நானிலத்தினில் நாதா
வெல்லுவேன்

3. உந்தன் சித்தமே செய்வேன்
என்றன் சித்தம் ஒழித்திடுவேன்
எந்த இடம் எனக்குக் காட்டினும்
யேசுவே அங்கே இதோ
போகிறேன்

4. கஷ்டம் நஷ்டம்
வந்தாலும்
துஷ்டர் கூடிச்
சூழ்ந்திட்டாலும்
அஷ்டதிக்கும் ஆளும்
தேவனே
அடியேன் உம்மில் அமரச்
செய்திடும்

5. ஒன்றுமில்லை நான்
ஐயா
உம்மாலன்றி ஒன்றும்
செய்யேன்
அன்று சீஷர்களித்த
ஆவியால்
இன்றே அடியேனை
நிரப்பும்

| | |
|---|---|
| ***பூலோகத்தாரே யாவரும்***<br>✝ Doxology | ***சபையார் இணைந்து***<br>Congregation |
| ***திருமறைப் பாடம்***<br>***மத்தேயு 25 : 14 - 30***<br>✝ Scripture Reading :<br>Matthew 25: 14 - 30 | ***மிஸ்.ஷீனா நோயல்***<br>Miss.Sheena Noel |
| ***அருளுரை***<br>Sermon | ***மறைதிரு. விஜய் ஜோஸப்***<br>Rev. Vijay Joseph |
| ***அர்ப்பணகீதம்***<br>✝ Offertory & Closing Song | ***சபையார் இணைந்து***<br>Congregation |

1.நமது இயேசு கிறிஸ்துவின் நாமம்
நானிலமெங்கும் ஓங்கிடவே
புனிதமான பரிசுத்த வாழ்வை
மனிதராம் எமக்களித்தார்

**தேவ கிருபை எங்கும் பெருக**
**தேவனை ஸ்தோத்திரிப்போம்**
**பாவ இருள் அகல**
**தேவ ஒளி அடைந்தோம்**

2. அவரை நோக்கி கூப்பிடும் வேளை
அறிவிப்பாரே அற்புதங்கள்
எனக்கெட்டாத அறிந்திடலாகா
எத்தனையோ பதிலளித்தார்

3. பதறிப்போன பாவிகளாக
சிதறி எங்குமே
அலைந்தோம்
அவரை நாம்
தெரிந்தறியோமே
அவர் நம்மைத்
தெரிந்தெடுத்தார்

4. பலத்த ஜாதி ஆயிரமாக
படர்ந்து ஓங்கி நாம் வளர
எளிமையும் சிறுமையுமான
எமக்கவர் அருள் புரிவார்

5. நமது கால்கள் மான்களைட் போல
நடந்து ஓடிப் பாய்ந்திடவே
உயர் ஸ்தலத்தில்
✝ ஏற்றுகின்றாரே
உன்னதமான ஊழியத்தில்

✝ 6. பரமனேசு வந்திடும் போது
பறந்து நாமும்
சென்றிடுவோம்
பரமனோடு நீடூழி வாழும்
பரம பாக்கியம் பெறுவோம்

| | |
|---|---|
| ***அறிவிப்புகள்***<br>Announcements | |
| ***முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்***<br>Closing Prayer & Benediction | ***மறைதிரு. விஜய் ஜோஸப்***<br>Rev. Vijay Joseph |
| ***ஆசீர்வாதப் பாடல்***<br>Benediction Song | |

***சபையார் நிற்கவும்*** ✝ Indicates Congregation standing